மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

<u>அசல் வழக்கு எண்.49/2020</u>

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 19.03.2024ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேமாதேவி | தொழில் | |
| க/பெ | பழனிச்சாமி | ஊர் | |
| வயது | | தாலூக்கா | பல்லடம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>19-03-2024 வா.சா. 1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு</u>

<u>குறுக்கு விசாரணை</u>

நான் என் இடத்திற்கு தடம் கேட்டு இந்த வழக்கை போட்டுள்ளேன். எனக்கு 5ம் பிரதிவாதிக்கும் இடையே தடம் குறித்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நான் 5ம் பிரதிவாதிக்கு எதிராக தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். தாவா சொத்து குறித்து ஆவணங்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளின் அலுவலகத்தில் உள்ளதால் அவர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அது என்ன வகையான ஆவணங்கள் என்று என் நிறுபண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி ஆவணங்கள் பொது அவணங்கள் என்கிற நிலையில் அதை மனு செய்தோ தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாகவோ பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்றால் இல்லை. பொய்யான தகலல்களை கூறி 1 முதல் 4 பிரதிவாதிகளை அழைக்கழிப்பு செய்ய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முறையான சட்ட அறிவிப்பு கொடுக்காமல் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தேவையான ஆவணங்களை உருவாக்கிக்கொள்ளவே 1 முதல் 4 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்பதால் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி ஆவது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ)